கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	2	2	56,67,00
பெருமொத்தம்		11,642,24,01	842,34,04	332,47,86

5. தகவல் கோரல்—தொடர்ச்சி

(உ) மன்னார்குடி தொகுதி, தலையாமங்கலம் ஊராட்சி, பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தில் முறைகேடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர், சமூக நீதிக் காவலர், தலைவர் கலைஞர் அவர்களால் உயரிய சிந்தனையோடு 1970 ஆம் ஆண்டு முதன்முதலில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் குறிப்பாக, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் துவங்கப்பட்டது. பின்பு அத்திட்டம்* IAY *ஆக இருந்து இப்போது* PMGAY*–வாக மாறியிருக்கிறது. மாறியிருக்கும் இந்தத் திட்டம் சமீப காலமாகப் பாதை மாறிச் செல்கிறதோ என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தலையாமங்கலம் ஊராட்சியில் பல்வேறு முறைகேடுகள் இப்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன. குறிப்பாக, 143 வீடுகள் அங்கே வழங்கப்பட்டிருந்தாலும், அங்கு வெறும் 10 வீடுகள் மட்டும்தான் கட்டப்பட்டிருப்பதாகத் தற்போதைய ஆய்வில் தெரிந்திருக்கிறது. மீதமுள்ள வீடுகளையே அங்கு காணவில்லை. அதேபோல், 504 கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன என்று கணக்குகள் கூறியிருந்தாலும், 400–க்கும் மேற்பட்ட கழிவறைகள் அங்கு ஒட்டுமொத்தமாகக் காணவில்லை. மிகப் பெரிய குளறுபடிகள் ஏற்பட்டுள்ளதோ என்று எங்கள் தலைவர், தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவர், வெகு விரைவில்*

2020 செப்டம்பர் 16] [திரு. டி.ஆர்.பி. ராஜா]

தமிழகத்தின் முதலமைச்சர், தி.மு.க. தலைவர் அவர்கள், எங்களுக்கு உத்தரவிட்டார்கள். நீங்கள் புள்ளிவிவரங்கள் முழுவதுமாக எடுக்க வேண்டும், சீராகப் பார்க்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு, ஆய்வு நடத்தியதன் அடிப்படையில் இத்திட்டத்தில் இறந்தவர்களின் பெயர்களில்கூட வீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிய வருகிறது. குறிப்பாக 2, 3 ஆதாரங்களை மட்டும் இந்த அவையில் சமர்ப்பிக்கிறேன். தங்களிடமும் இதைத் தர உள்ளேன். திரு. ஜெயச்சந்திரன் என்பவர், 14–9–2018 அன்று இறந்திருக்கிறார். ஆனால், 2019 ஆம் ஆண்டு அவருக்கு வீடுகட்ட அனுமதி வழங்கப்பட்டு, fund release *செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் திரு. சிவபாக்கியம் அவர்கள், 24–1–2017–ல் இறந்திருக்கிறார், அவருக்கும் 2019–ல்* fund release *செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் திரு. கோவிந்தன் அவர்கள் 2016–ல் இறந்திருக்கிறார், அவருக்கும் 2019–ல்* fund release *செய்யப்பட்டிருக்கிறது. மிக மிக மோசமாக 30–6–2012–ல் இறந்த சரண்யா என்பவருக்கு 2017–2018–ல் வீடு வழங்கப்படுகிறது. இவர்கள் அனைவருக்கும் 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்* cards *இருக்கின்றன. எப்படி இருக்கிறது என்பது தெரியவில்லை. முதலில் நான் சொன்னவர், கோவிலூரில்* S.I. *ஆக இருந்து பணி ஓய்வு பெற்றவர்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா, உரையை சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ முடித்துவிட்டேன்.* PMAY–G, PMAY–U *என்ற இத்திட்டத்தின்கீழ் வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதில்* urban *மற்றும்* gramin *என்ற அடிப்படையில் பல குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறோம், நல்லபடியாக பராமரித்துக்கொள்ளுங்கள் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கடிதம் எழுதுகிறார்.*

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *ஆனால், அவர்கள் குடிசையில்தான் வாழ்கிறார்கள். ஏன் எங்களுக்கு வீடே வழங்கப்படவில்லை? எப்படி மாண்புமிகு பிரதம மந்திரி கடிதம் எழுதுகிறார்? என்று அவர்களெல்லாம் வியப்பில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு*

கட்டப்படாமல் பணம் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. இதை முழுமையாக ஆராய்ந்து வருகிறார்கள். திருவாரூர் மாவட்டத்தில் 430 கிராமங்களிலும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: முடித்துவிடுகிறேன். கருணாவூர் ஊராட்சியில் தற்போது ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. 233 வீடுகளில் 100-க்கும் மேற்பட்ட வீடுகள் வழங்கப்படவில்லை. அதேபோல் 1,000 கழிவறைகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன என்று மத்திய அரசாங்கத்தில் இந்தத் திட்டத்தில் பொறுப்பில் உள்ளவர்கள் கணக்கு சொல்கிறார்கள். அவற்றில் 100 கழிப்பறைகள்கூட கட்டப்படாமல் ஒட்டுமொத்தமாக காணாமல் போயிருக்கின்றன. இது ஒரு மிகப் பெரிய குளறுபடி. தமிழகமெங்கும் அனைத்து ஊராட்சிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் PMAY-U, PMAY-G திட்டங்களின்கீழ் எங்கெல்லாம் வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகிறதோ அங்கெல்லாம் அரசு ஆய்வு செய்ய வேண்டும். எங்கெல்லாம் வீடுகள் சரியான முறையில் கட்டித்தரப்படாமல் பணம் கையாடல் செய்யப்பட்டிருக்கிறதோ அந்தப் பணம் திரும்பப் பெறவேண்டும். உரிய நபர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள், திரு. ராஜா. திரும்பத் திரும்ப அதையே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: முக்கியமான விஷயம், அவ்வளவுதான் முடித்துவிடுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டத்தில் பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2016-2017 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை 26,476 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டது. இதில் 14,160 எண்ணிக்கையிலான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2020 செப்டம்பர் 16] [திரு. எஸ்.பி. வேலுமணி]

மீதமுள்ள 12,316 எண்ணிக்கையிலான வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், மன்னார்குடி வட்டாரம், தலையாமங்கலம் ஊராட்சியில் பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டத்தில் முறைகேடுகள் நடைபெற்றதாக 22–7–2020 அன்று புகார் மனு பெறப்பட்டது. அதைத் தொடர்ந்து 23–7–2020 அன்று திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவித் திட்ட அலுவலர் தலைமையில் விசாரணை மேற்கொண்டு, அறிக்கை அனுப்ப குழு நியமனம் செய்யப்பட்டது. இது தொடர்பாக, விசாரணை அலுவலரிடமிருந்து 27–7–2020 அன்று முதல்கட்ட விசாரணை அறிக்கை பெறப்பட்டது. அதன் அடிப்படையில் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் இந்நிகழ்வு நடைபெற்றபோது மன்னார்குடி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணிபுரிந்த 2 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஓர் இளநிலை பொறியாளர் மற்றும் ஒரு பணி மேற்பார்வையாளர் ஆகியோரை 31–7–2020 அன்று தற்காலிகப் பணிநீக்கம் செய்து ஆணை வெளியிட்டார்கள். மேலும், இம்முறைகேட்டில் ஈடுபட்ட தலையாமங்கலம் ஊராட்சி செயலர், ஏற்கெனவே தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும், மன்னார்குடி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் பணிபுரிந்த தற்காலிக கணினி உதவியாளர் உடனடியாக பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். மேலும், இந்நிகழ்வுகள் தொடர்பான இறுதி விசாரணை அறிக்கை 10–8–2020 அன்று பெறப்பட்டது. இறுதி விசாரணை அறிக்கையில், தலையாமங்கலம் ஊராட்சியில் 2016–2017 ஆம் ஆண்டு முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் இணையதள நிருவாக அனுமதி பெறப்பட்ட 143 பயனாளிகளில், 31 பயனாளிகள் மட்டுமே சமூகப் பொருளாதார, சாதியக் கணக்கெடுப்பில் பட்டியலிடப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 112 நபர்கள் இப்பட்டியலில் இடம்பெற்றதாகப் பதிவு எண் மற்றும் பெயர்களை மட்டும் பயன்படுத்தி, பயனாளிகளுக்குத் தொடர்பில்லாத மாற்று நபர்களின் வங்கிக் கணக்கினை இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, வீடுகள் வழங்கப்பட்டதாகவும் அதில் பெரும்பான்மையான வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாற்று நபர்களின் வங்கிக் கணக்கில் பணிகளின் முன்னேற்றத்திற்கேற்ப பொது நிதி மேலாண்மைத் திட்ட முறையில் இணையதளம் வாயிலாக பட்டியல் தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2020 செப்டம்பர் 16

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இவ்வாறு, திருவாரூர் மாவட்டத்தில் பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்ட வழிகாட்டுமுறைகளைப் பின்பற்றாமல், முறைகேட்டில் ஈடுபட்ட 4 வட்டார வளர்ச்சி அலுவலர்கள், 3 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், 1 இளநிலை பொறியாளர் மற்றும் 1 பணி மேற்பார்வையாளர் ஆகியோர்மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17 (ஆ)-ன்கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை பிறப்பிக்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், பொதுவாக, இதுபோன்ற சூழ்நிலை இப்போது மட்டும்தான் நடைபெற்றது இல்லை. மொத்தமாக 12,525 ஊராட்சிகள் இருக்கின்றன. வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களில் சிலர் இறந்துபோகிறார்கள். அதுபோன்ற சூழ்நிலையில் அவர்களுடைய மகன் அல்லது மகளுக்கு வீடு வருகிறது. இந்தத் திட்டத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 50,000 ரூபாய் கூடுதலாகக் கொடுத்தார்கள். மொத்தமாக மத்திய அரசு கொடுக்கும் தொகை 72,000 ரூபாய், மாநில அரசு 98,000 ரூபாய் கொடுக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 2-05

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், கஜா புயலின்போது சம்பந்தப்பட்ட மாவட்டங்களில், தனிக் கவனம் எடுத்து கூடுதலாகத் தொகையை அறிவித்தார்கள். அது, உங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்டங்கள்தான். கஜா புயலின் பாதிப்பால் எல்லா பகுதிகளிலும் வீடுகள் கட்ட வேண்டிய சூழ்நிலை இருந்தது. சமூகப் பொருளாதார சாதியக் கணக்கெடுப்புப் பட்டியலில் உள்ள நிறையபேர் Awaas+ திட்டத்தில் இடம் பெறவில்லை என்று சொல்கிறார்கள். இதில் 9 இலட்சம் நபர்களைச் சேர்க்க வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இதனை அமைச்சரவையில் வைக்க வேண்டும்; 9 இலட்சம் பயனாளிகளை அந்தப் பட்டியலில் சேர்க்க வேண்டும். பாரதப் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில், இந்தியாவில் நாம்தான் அதிகளவில் வீடுகளைக் கட்டிக் கொண்டிருந்தோம். மற்ற மாநிலங்களில் வீடுகளைக் கட்ட முடியாத சூழ்நிலையில்கூட, நாம் அதிகமான வீடுகளை கட்டியிருக்கிறோம். சமூகப் பொருளாதார சாதியக் கணக்கெடுப்பு பட்டியலின்படி Awaas+ திட்டம் வந்தவுடன் அதிக நபர்களுக்குக் கொடுக்க முடியாத

2020 செப்டம்பர் 16] [திரு. எஸ்.பி. வேலுமணி]

ஒரு சூழ்நிலை இருக்கிறது. சில இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோ, பஞ்சாயத்து தலைவர் அவர்களோ சில விதிமுறைகளை மீறி செய்து விடுகிறார்கள். ஆனால், அங்கு போய் பார்க்கும்போது விதிமுறைகள் இல்லாவிட்டாலும்கூட அவர்கள் வறுமைக் கோட்டின்கீழ் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இது எங்கள் ஆட்சிக் காலத்தில் மட்டுமல்ல, உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் இருந்தது.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், வெண்தோணி ஊராட்சியில் 2008-2009 ஆம் ஆண்டில் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் அரசுப் பணியில் இருந்த திரு. முனியாண்டி, திருமதி அன்னம்மாள், திருமதி சாந்தி ஆகியோருக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். முறைகேடாக பணி ஆணை வழங்கப்பட்டதற்கு, அப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; நாங்களும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம். இராமநாதபுரம் ஒன்றியத்தில், புல்லாங்குடி ஊராட்சியில், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 20 பயனாளிகளுக்கு முறைகேடாகப் பணி ஆணை வழங்கப்பட்டது. விருதுநகர் மாவட்டத்தில், ராஜபாளையம் ஒன்றியத்தில், கணபதி சுந்தரம், நாச்சியார்புரம் ஊராட்சியில் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ், இறந்து போன மூன்று பேர்களுக்கு, திரு. சின்ன பிள்ளையார், திரு. கருப்பையா, திரு. சுந்தரம் ஆகியோருக்கு முறைகேடாக 2009-2010 ஆம் ஆண்டில் கொடுத்திருக்கிறீர்கள். இதற்கு நாங்கள் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஒன்றியம், செங்காணம் ஊராட்சியில், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2007-2008 மற்றும் 2009-2010 ஆம் ஆண்டுகளில் மூன்று பயனாளிகள் திரு. கருப்பன், திரு. அச்சப்பன் மற்றும் திருமதி அமுதா ஆகியோருக்கு வீடுகள் கட்டப்படாமலேயே, வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டதாக ஆவணம் தயாரிக்கப்பட்டு பணம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

பொன்னமராவதி ஒன்றியத்தில், செவலூர் மற்றும் மலையம்பட்டி ஊராட்சிகளில் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2008-2009 மற்றும் 2009-2010 ஆம் ஆண்டுகளில் 11 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்காமலேயே கட்டிக் கொடுத்ததாக ஆவணம் தயார் செய்து, பணம் மற்றும் கட்டுமானப் பொருட்களையும் சேர்த்து, ரூ.6.76 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், திருப்பத்தூர் ஊராட்சியில், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் மற்றும் கலைஞர் வீட்டு வசதித் திட்டம் ஆகியவற்றின்கீழ் 2007–2008 ஆம் ஆண்டில் பணி ஆணைகள் வழங்கப்பட்டு, 6 பயனாளிகளான திருவாளர்கள் ராஜாம்மாள், பரமசிவம், ராமசாமி, நல்லத்தங்காள், செல்வராஜ் மற்றும் கோவிந்தசாமி ஆகியோர் வீடு கட்ட இயலாத நிலையில், அதே பணி ஆணைகளில் வேறு நபர்களை அனுமதித்து வீடுகளைக் கட்டியதாகத் தெரிவித்து தொகைகளை எடுத்திருக்கிறார்கள்.

விருதுநகர் நகராட்சி பற்றிச் சொன்னீர்கள். மத்திய அரசின் ஒருங்கிணைந்த குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2008–2009 ஆம் ஆண்டில் விதிகளுக்கு முரணாக 676 நபர்களுக்கு வீடுகள் கட்டியதில் பல்வேறு முறைகேடுகள் நடந்திருக்கின்றன. சுமார், 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருமதி பாண்டிச்செல்வி என்பவர் வீடு கட்டியிருக்கிறார்; மானியமும் வழங்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. எந்த ஊராட்சியிலும், எந்த ஒன்றியத்திலும் முறைகேடுகள் நடந்திருந்தாலும் எந்த அரசாக இருந்தாலும் நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன. கிட்டத்தட்ட 9 இலட்சம் பயனாளிகள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளார்கள், அவர்களை Awaas+ பட்டியலில் சேர்க்கச் சொல்லி, மத்திய அரசிடம் வலியுறுத்தியிருக்கிறோம். அந்தப் பட்டியலில் அவர்களை சேர்த்தால்தான் கூடுதலாக வீடுகளைக் கட்ட முடியும். அதிகமான வீடுகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்; இப்போது குறைவாக இருக்கிற சூழ்நிலையிருக்கிறது. அதனால்தான் இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றன. உண்மையாகவே வசதி இல்லாமல் இருப்பவர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு நாம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் இதுகுறித்து வலியுறுத்தியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் 9 இலட்சம் பயனாளிகளைச் சேர்த்தால் கூடியவிரைவில் அதிகமான வீடுகள் கட்டப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தவறுகள் எங்கு நடந்தாலும் கண்டிப்பாக உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள், எனவே கண்டிப்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*